## ஸ்ரீலங்கா கேட்டரிங் லிமிட்டட்டின் - 2017/2018

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீலங்கா கேட்டரிங் லிமிட்டட்டின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும். இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் கம்பனியின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 12 ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ. நான் அபிப்பிராயப்படுவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் சீராகக் காணப்படுகின்றது.

- முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளினை உள்ளடக்கியுள்ளது.

- இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் வழங்கப்பட்ட தகவல்களினைத் தவிர, வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கம்பனியால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும், ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுகின்றேன்.

இ. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தவை பின்வருமாறு.

- கம்பனியின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட வழிகாட்டல்களுடன் இணக்கப்பாடு.

- அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைப் பொறுப்புக்களின் பிரகாரம் செயற்படல்,

- பிரயோகிக்கப்படக்கூடிய சட்டங்களுடனான இணக்கப்பாட்டுடன் கால வரையறைகளுக்குள் வளங்களினை பொருளாதார ரீதியிலும், வினைத்திறனாகவும் மற்றும் செயற்திறனாகவும் கொள்வனவு செய்து பயன்படுத்துதல், என்பனவாகும்.

**2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

மத்தள விமானப்பயண தொழிற்பாடுகளுக்காக கொள்வனவுசெய்யப்பட்ட ரூபா 59,534,711 தொகையான பெறுமதியுடைய உபகரணங்கள் ஒவ்வொரு ஆண்டும் 20 சதவீதத்தினால் நட்டக்கழிவிடப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நட்டக்கழிவு ஏற்பாடு ரூபா 11,241,785 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், நட்டக்கழிவு பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை தொடர்பில் கணக்காய்விற்கு சான்றுகள் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2 தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 5,976 மில்லியன் வியாபார வருமதிகளில் 57 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5,362 மில்லியன் தொகையொன்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து (தாய்க் கம்பனி) அறவிடவேண்டிக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மேற்குறித்த நீண்டகால நிலுவையான மீதி காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின்போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிற்கு ரூபா 5,314 மில்லியன் தொகை பங்கிலாபத்தினை கம்பனி அறிவித்திருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |

| | | |
|---|---|---|
| (i) | 7.4.5 ஆம் பந்தி | வருடாந்த பொருள் அளவைச் சபை கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 9.3.1(i) ஆம் பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டம் (எஸ்ஓஆர்) பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வரிசை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,736,386,777 இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 3,890,304,533 தேறிய இலாபமொன்றை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 153,917,756 அதிகரிப்பொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது ரூபா 1,228,466,497 இனால் விமான சமையலறை வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2017/18 | 2016/17 | 2015/16 | 2014/15 | 2013/14 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்களுக்கான நடைமுறைச் சொத்துக்கள் (திரும்பல்களின் எண்ணிக்கை) | 6.44 | 8.76 | 9.74 | 9.50 | 8.72 |
| விரைவு விகிதம் | 6.14 | 8.46 | 9.43 | 9.03 | 8.26 |
| கடன் உரிமை மூலதன விகிதம் | 0.26 | 0.19 | 2.1 | 0.55 | 0.66 |
| ஈபிஎஸ் - பங்கொன்றிற்கான உழைப்பு | 4.14 | 3.97 | 3.87 | 2.33 | 2.41 |
| பங்கொன்றிற்கான பங்கிலாபம் | 2.27 | 3.38 | 3.29 | 2.23 | 1.36 |
| மொத்த இலாபம் | 77% | 77% | 77% | 76% | 75% |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 58% | 46% | 49% | 37% | 49% |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறுங்காலக் கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள் மற்றும் வியாபார செலுத்த வேண்டியவைகள் பிரதானமாக அதிகரித்தமை காரணமாக மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன குறைவடைந்திருந்தன.

(ஆ) வரிக்குப் பின்னரான இலாபம் அதிகரித்தமை காரமணாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் முறையே 17 சதவீதம் மற்றும் 10 சதவீதத்தினால் பங்கொன்றிற்கான உழைப்பு அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இருப்புக்களினை விநியோகிக்கும் திகதியில் உள்ளவாறு இருப்பினை பெறுமதியிடுவதற்கு முறைமை காணப்படாமை காரணமாக, முறைமையினால் உருவாக்கப்பட்ட விற்பனைக் கிரயங்கள் அறிக்கைக்கும் கணக்காய்வாளரின் தனிப்பட்ட கணிப்பீட்டிற்குமிடையே ரூபா 20,647,193 வித்தியாசமொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 மனிதவள முகாமைத்துவம்

2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல் கீழே தரப்பட்டுள்ளன.

| சேவை வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர்கள் | | 60 | |
| மேற்பார்வையாளர்கள்/ தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்/ விற்பனையாளர் | 1,047 | 596 | 13 |
| திறன் மற்றும் பகுதியளவிலான திறன்கொண்ட வேலையாளர்கள் | | 194 | |
| அமைய மற்றும் பயிலுனர்கள் | | 211 | |
| மொத்தம் | 1,074 | 1,061 | 13 |

பதவியணியினர் தொடர்பில் தனித்தனியான சேவை வகைளினை கருத்திற்கொண்டிராது மொத்தமாக ஊழியர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

''நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்'' இற்கான 2030 நிகழ்ச்சித்திட்டம் பற்றி இலங்கை கேட்டரிங் லிமிட்டட் அறிந்திருக்காமையினால், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளினை இனங்காண்பதற்கு அதனுடன் இணைந்ததாக அந்த இலக்குகளினை அடைந்து கொள்வது தொடர்பில் மைல்கற்கள் மற்றும் அவ்வாறான இலக்குகள் அடைந்துகொள்ளப்படுவதனை மதிப்பீடு செய்வதற்கான குறிகாட்டிகளினை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | | **அவதானிப்புக்கள்** |
| --- | --- | --- |
| (அ) சொத்து முகாமைத்துவம் | (i) | பொருள் அளவைச் சபை மற்றும் சொத்து மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | கம்பனியில் எவ்விதமான முறையான சொத்து குறியீட்டு முறைமையும் காணப்படாமை. |
| (ஆ) தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் | | செயற்பாட்டிலுள்ள விவரப் புத்தகங்களிற்கான கடவுச்சொல் (Password) மற்றும் கணக்கு கதவடைப்பு கட்டமைப்புக்கள் (Account lock out Configurations) என்பன சிறந்த நடைமுறையின் பிரகாரம் காணப்படவில்லை. |